
உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"




அமரர் திருமதி சிவபாக்கியம் நடராசா

(இளைப்பாறிய அதிபர்) அவர்களின்


# நினைவு மலர்

நயினாதீவை பிறப்பிடமாகவும், புங்குடுதீவை
புகுந்த வாழ்விடமாகவும், கனடாவை வதிவிட
மாகவும் கொண்ட ஓய்வு பெற்ற
பாடசாலை அதிபர்

# திருமதி சிவபாக்கியம் நடராசா

**அவர்களின்**

**சிவப்பேறு குறித்த**



# நினைவு மலர்

## 30.04.2000



# சமர்ப்பணம்

சங்கத் தமிழ் ஆசிரியையாய் தரணியில் மங்காத
புகழுடன் மாண்பு பெற்றீர்!
பொங்கிடும் செல்வம் பொலிந்த வாழ்வினில்
இங்கிதமாக எல்லோரையும் அரவணைத்தீர்.
தங்கிய பெருமையில் சந்திரனைக்
கண்டு பொங்கிடும் அலைபோல் நாம்
பூரித்தோம் இங்கு இரங்கியேங்கி அழ பங்கய
வதனம் சடுதியில் வாடியதேனோ
திங்களொன்று முடிந்திடுமித்தினத்தில்
எங்கள் காணிக்கையாய் இம்மலரை உங்கள்
பாதக்கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரே உன்றன் காலடியில் நான் பணிந்தேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்

உ
சிவமயம்

# அன்பின் வடிவமே அம்மா

## அமரர் திருமதி சிவபாக்கியம் நடராசா

(இளைப்பாறிய அதிபர்)



மண்ணில்:
16-03-1926

விண்ணில்:
31-03-2000

***திதி வெண்பா***

ஆண்டு பிரமாதி ஆம்பங் குனி அபரம்
பூண்ட துவாதசியில் பொற்புமிகும் - நீண்டசீர்
நல்லாசிரியை யென நாங்காண் - சிவபாக்கியம்
சொல்லாமல் சேர்ந்தாள் சிவம்

# அன்னையின் மலரடிகளில் . . . . . . . .

அன்பே உருவான எம் ஆருயிர் அம்மா!
அறிவின் சுடரொளித் தாயே அம்மா!
அன்னையே! இன்று நீங்கள் எங்கே அம்மா! - உங்கள்
அமுதில் வளர்ந்த பிள்ளைகள் தவிப்பது தகுமோ அம்மா!

ஆதரவின்றி நிற்கின்றோம் இன்று உங்களைப் பிரிந்து
ஆறுதல் சொல்லித் தேற்ற இனி யார் நமக்கு
இதயமே! உங்களை எண்ணி இனி நாம் தினம்
இருதயத்தில் வைத்திட உங்கள் இருதயம் நின்றதுவோ!

ஈட்டியால் குத்துவது போல் நெஞ்சில் ஒரு உணர்வு
ஈவது விலக்கேல் என நீங்கள் கூறும் ஒலி கேட்கிறது
உலகமே இருண்டது போல் உள்ளது எம் மனதில்
உயிர்தந்த தாயே உமக்கு உயிரில்லையே!

ஊஞ்சலில் வைத்து ஆட்டி எம்மை வளர்த்தாய்
ஊர்விட்டுப் புலம் பெயர்ந்தநாட்டில் மறைந்தாய்
எல்லாம் இறைவன் செயல் என எண்ணி நாம்
எம் மனதை தேற்றுகின்றோம் எங்கள் தாயே!

ஏணி போல் எம் அறிவு ஏறிட வேண்டுமென்று
ஏக்கத்துடன் எமக்கு எழுத்தறிவு ஊட்டினாய்
ஐயிரண்டு மாதம் எமைச் சுமந்த தாயே
ஐம்புலன்களும் இன்று அடங்கியது ஏனோ அம்மா!


ஒழுக்கம், ஒற்றுமை என்பவை தனை எடுத்துரைத்து
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லலாகாது என ஓதி
ஓ! அம்மா நீங்கள் இன்று எங்கு சென்றீர்கள்
ஓ வென நாம் கதறுவது உம் செவியில் விழவில்லையோ!

ஔவையின் தத்துவத்தை எல்லாம் நமக்கு அளித்து
அ்.து எல்லாம் கடைப்பிடித்து நாம் வாழ வழிகாட்டி
அம்மா நீங்கள் ஒரு பதிலேதும் சொல்லாமல் எமக்கு
அன்னையே! எம் தெய்வமே! சென்றதெங்கே நீர் பகிராயோ!

அன்பின் உருவம் எம் அம்மா இன்று எம்முடன் இல்லை. நினைப்பே நீ பொய்யாக இருக்கக் கூடாதா என்று மனம் ஏங்கித்தவிக்கிறது. ஆனால், அதுவே நிஜம் என்றதும் அருவியாய் எம் விழிகள். கருணையே உருவான அம்மா எமது தந்தைக்கு ஓர் அமைச்சராக இருந்து மனைத்தக்க மாண்புடையவளாய் தமது இல்வாழ்க்கையின் சின்னங்களாய் எம் அனைவரையும் வளர்த்துவிட்டீர்கள்.

“மதலையைப் பெறும் நான் துன்பம் வளர்த்திடும் நாளுந் துன்பம் விதலை நோயடையின் துன்பம்” எனப் பாவலர் பாடியது போல் வந்த துன்பங்ளையெல்லாம் தாங்கி ஒரு தடவை கூட எங்களைக் கண்டித்தோ, அடித்தோ இல்லாமல் வளர்த்தீர்கள். மலரைப் போன்ற உங்கள் மனத்தால் தானோ மலர்த்தோட்டத்தை, உங்களைச் சுற்றி வைத்திருந்தீர்கள். உங்கள் பிரிவால் வாடிய ஒருவர் உங்கள் இறுதிப் பயணத்தின் போது இதனால் தானோ “மலரால் உங்கள் மேல் தூவுங்கள். அவர் மலர்த் தோட்டத்துள் வாழ்ந்தவர்” என்று சொன்னார். அம்மா நீங்கள் அன்பு மயமானவர், இரக்க மிக்கவர், பண்பு நிறைந்தவர், புரிந்துணர்வு மிக்கவர். அமைதியான தோற்றமும் சுபாவமும் உள்ளவர். கல்வியை கற்பித்தலை உங்கள் பணியாக கொண்டீர்கள். உங்கள் மாணவர்களின் முன்னேற்றத்தில் மகிழ்ச்சி கண்டீர்கள். அவர்களையெல்லாம் கலங்க வைத்துவிட்டு மறைந்து விட்டீர்கள். உங்கள் பிள்ளைகளுடன் வாழ்வதற்காய் இங்கு வந்து இந்த நாட்டின் பிரஜையாகி மகிழ்ந்தீர்கள். உங்கள் பழைய உறவுகள் பலரை மீண்டும் இங்கு சந்தித்தீர்கள். இந்த காலத்தின் ஓட்டத்தில் ஏழாண்டுகள் ஓடிவிட காலனும் உங்கள் உயிரை பறித்து விட்டானே. அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உள்ளக் கமலத்தினால் அம்பிகையின் பாதங்களில் இறைஞ்சி நிற்கின்றோம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல∴துறும் கழுமலவள நகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.



# நினைவுப் பதிவு

ஈழத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள வளம் கொழிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கு திசையில் கடலில் பரந்து கிடக்கும் சப்த தீவுகளில் ஒன்றான, நாகபூஷணி அம்மன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் நயினாதீவில் சிறப்புடன் வாழ்ந்த நாகலிங்கம், இலட்சுமிப்பிள்ளை தம்பதியினர்க்கு தலைமகளாக 1926ம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி அமரர் சிவபாக்கியம் பிறந்தார். மனோன்மணி (ஆசிரியை) சிவமணி(ஆசிரியை) என்போரை சகோதரிகளாகவும், சதானந்தன்(கணக்காய்வு பரீட்சகர்) என்பவரை சகோதரனாகவும் பெற்று மகிழ்ந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவின் முன்னோடிப் பாடசாலையான தில்லையம்பல வித்தியாசாலையிலும் பின்னர் நாகபூசணி வித்தியாசாலையிலும் பெற்று கல்வியில் சிறந்து விளங்கியமையால் நல்லூர் ஆசிரிய கலாசாலை பயிற்சிக்கு 1944ல் தெரிவு செய்யப்பட்டார். இவர் மிக இளம் வயதில் 1942ல் S. S. C சித்தியடைந்த போது 16 வயது ஆனதினால், உடன் ஆசிரிய கலாசாலைக்குப் போக முடியாததனால் 1944ல் ஆசிரியத் தேர்வுப் பரீட்சைக்கு 17 வயதில் தோன்றி அதில் தெரிவு செய்யப்பட்டார். 1945-46களில் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்த இவர் நிரந்தர ஆசிரியப் பணியை நயினாதீவு ஆங்கில கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். ஆசிரியத் தொழில் இடமாற்றத்திற்கு உரியதாகையால் கண்டி, வாழைச்சேனை, மன்னார், வேலணை போன்ற இடங்களில் தனது பணியை மேற்கொண்டார். இறுதியில் இவரது புகுந்த இடமான புங்குடுதீவு இவரது ஆசிரிய சேவை பெறும் பாக்கியம் பெற்றது. புங்குடுதீவின் பல பாடசாலைகளில் கடமையாற்றிய இவர் இறுதியில் அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

ஆசிரிய கலாசாலையில் சக பயிற்சி ஆசிரியராக இருந்த புங்குடுதீவைச் சேர்ந்த நாகலிங்கம் நாகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் நடராசாவை(இளைப்பாறிய அதிபர்) 1948ம் ஆண்டு திருமணம் புரிந்தார். இல்லற வாழ்வு இன்பம் பெருகி நல்லறமாக விளங்கியது. அதன் பயனாக சுசீலா, சுலோஜனா, சுமங்கலா என்ற புத்திரிகளையும் சுகுமார், சுரேஸ்குமார், சுதாகரன் என்ற புத்திரர்களையும் மக்கள் செல்வங்களாகப் பெற்று மகிழ்ந்தார். தம்மக்களை அறிவறிந்த மக்களாக ஆக்கி வையத்துள் முந்தியிருக்கச்

செய்து மகிழ்ந்தார். தம்மக்கள் வாயிலாக உமாபதிசிவம், லோகேந்திரன், சண்முகநாதன், என்ற மருகரையும் வசந்தினி, ஞானசௌந்தரி, நந்தவருணி என்ற மருகியரையும் அடையப் பெற்றார். இறுதிக் காலத்தில் பவித்ரா, சிந்தூரா, ஓவியா, இலக்கியா, ஹரிஷ், கோகுல், நரேன், சுரநுதா, தாமிரா ஆகிய பேரப் பிள்ளைகளின் மழலையில் திளைத்தார்.

ஆசிரியப்பணியின் போது ஆசிரிய தொழிற் சங்க உறுப்பினராகவும் செயற்பட்டு பாடசாலைகளின் பலதரப்பட்ட அபிவிருத்திக்காகப் பாடுபட்டது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பெருங்காடு மாதர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவியாகவும், போஷகராகவும் செயற்பட்டு மாதர் நலனில் அக்கறை காட்டினார். சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி மக்கள் சேவையில் மகிழ்ச்சி பெற்றார். புங்குடுதீவு கிராமத்தில் அதிபர் பதவிவகித்த முதலாவது பெண் என்ற பெருமைக்கு ரியவராக விளங்கினார்.

கணவனே கண்கண்ட தெய்வம் என்று கருதி நோய்வாய்ப்பட்டிருந்த துணைவனிற்கு மனம் நோகாமல் பணிவிடை ஆற்றியதனால்தான் மரணம் வேதனையின்றி இவரை விரைவில் ஆட்கொண்டது எனலாம். புலம் பெயர்ந்த கனடாவில் அவரின் உயிர் 31.03.2000 சந்தடியின்றி சஞ்சல மின்றி அமைதியாக ஆடவல்லான் அடியினை அடைந்தது இது ஒரு பெரும் பேறெனலாம்.

குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு என்ற
குறளுக்கு இலக்கணமாக அமைந்துவிட்டது அமரரது பிரிவு

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்பே சிவம்: சிவாய நம

# அமரர் திருமதி. சிவபாக்கியம் நடராஜா ஆற்றிய கல்விப்பணி புனித தெய்வப்பணியாய்ப் பரிணமித்து நிலைத்த புகழ் நினைவுகள்.

தமிழ் ஈழத்தில் தலைசிறந்த புனிதத்தலமாகிய நயினா தீவிலே தோன்றி அமரராகிய திரு. திருமதி. ஆ. நாகலிங்கம் தம்பதியரின் செல்வத் தலைமகளாகப் பிறந்து ஆசிரியையாகி புங்குடுதீவிலே புகழ் பூத்த ஆசிரியரான திரு. நா. நடராசா அவர்களை வாழ்க்கைத் துணைவராகப் பெற்று பல பாட சாலைகளில் நல்லாசிரியராகவும், அதிபராகவும் பணி ஆற்றி யும், அறிவறிந்த மக்கள் அறுவரைப் பெற்றும், உத்தம சீலர்களாக உருவாக்கியும், கனடாவில் குடியேறி அவர்களை யும் பேரக்குழந்தைகளையும் இனிதே பேணி "இயம்பினான் இல்வாழ்க்கை வாழ்பவர் என்பார் முயல்வாருள் எல்லாம் தலை" என்ற வாக்கிற்கமைய இறுதிமூச்சு வரையும் எவரும் போற்றத்தக்க "வையத்து வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று தெய்வப் புலவர் திருவள் ளுவர் சுட்டிக்காட்டிய தெய்வப்பணியை இனிதே நிறைவு செய்தவர் அமரரான திருமதி. சிவபாக்கியம் நடராசா அவர் கள். அவரின் குடும்பச் சிறப்புக்களையும் ஆசிரியக் கல்விப் பணிச் சிறப்புக்களையும் இவ்வுலகில் எவரும் முன்மாதிரி யாகக் கொண்டு வாழ்வதற்கு ஆதாரமான உண்மைச்சான்று கள் பல உள்ளன. அவருடைய தந்தையார் நயினாதீவிலே ஸ்ரீ நாகபூசணி அம்மன், ஸ்ரீ வீரபத்திர பெருமான் ஆகிய இரு திருக்கோயில்களிலும் நித்திய நைமித்திகப் பூஜைகளுக்கு மிகமிக முக்கியமான பல்வகை மலர்களை வீரபத்திரர் கோயில் பக்கத்தில் பூந்தோட்டத்தை நிறுவிப் பரிபாலித்து உதவிய தெய்வத் திருத்தொண்டைத் தமது வாழ்வுத் திருப் பணியாகக் கொண்ட உத்தமர்.

நயினாதீவிலே நிலையாக வாழும் மக்களுக்கும் யாத்திரீகர்களாக வந்து மீளும் மக்களுக்கும் வேண்டிய அன்றாட நுகர்பண்டங்களையும், தனது உழவுத் தொழில் வழியாக வேண்டிய காய்கறிகளையுமே தனது சொந்தச் சுற்றுலா வணிக வண்டியிலே ஏற்றி வழங்கி "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போற் செயின்" என்று வள்ளுவர் வாழ்த்திய நடுநிலை பேணிய வணிக வாழ்க்கையைத் தமது வாழ்க்கைப் பணியாக்கி வாழ்ந்தவர். அதனால் அவர் பெற்ற மூன்று பெண்மணிகளுமே புனிதமான

ஆசிரியைகளாகப் பணியாற்றினார்கள். அவர் பெற்ற ஒரே மகனும் தலைசிறந்த கணக்காய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது பொய்யா மொழியன்றோ! நூல்களை ஐயந்திரிபறக் கற்பிக்கும் ஆசிரியக் கல்விப் பணியாளரின் இலக்கணத்தை "குலன் அருள், தெய்வக் கொள்கை மேன்மை கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை, நிலம் மலை, நிறைகோல், மலர் நிகர்மாட்சியும், உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும் அமைபவர் நூலுரை ஆசிரியரே" என்கிறார் நன்னூலார், "குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்" என்கிறது ஒரு முதுமொழி. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை! நிலத்தின் பொறுமையே பொறுமைக்குரிய உவமானச் சிறப்பு என்கிறது தமிழ் வேதம். அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே என்பது மலையின் மாட்சி. "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொரு பால் கோடாமை சான்றோர்க்கணி" என்பதும், ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகவைச் சான்றோர் எனக் கேட்ட தாய் என்பதும், சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு என்பதும் தமிழ் அமுத வாக்குகள். மலரின் மாட்சியை உலகமக்கள் எல்லோருமே எப்போதும் எங்குமே நன்கறிந்து பாராட்டிக் கொண்டேயிருக்கின்றனர். இந்த அருமையான நிலம், மலை, நிறைகோல், மலர் என்கின்ற நால்வகைப் பொருட் சிறப்புக்களையும் கொண்ட ஆசிரியக் கல்விப் பணியைத் தனது லட்சியப் பணியாக்கி வாழ்ந்து, மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார் என்ற பொய்யா மொழிக்கு உதாரணமாகிப் புகழ் பூத்த ஆசிரியத் திலகமாகி என்றும் பொன்றாப் புகழுடன் அமரராகியும் திகழ்பவர் அமரர் திருமதி. சிவபாக்கியம் நடராசா. எனவே, நாம் அனைவருமே அவரை என்றும் நினைவு கூர்வோமாக.

அன்பிற் சிறந்த
அ. சி. நல்லையா.
உறவினர், ஆசிரியர்,
அதிபர், கல்வி அதிகாரி.

# கல்விப்பணியை தெய்வப் பணியாக மேற்கொண்ட ஆசிரியை திருமதி. சிவபாக்கியம் நடராஜா.

அன்பும் இனிய அடக்கமான பண்பும், அமைதியான சுபாவமும், ஆற்றலும் கல்வியறிவிற் சிறந்து விளங்கிய அன்புருவம்தான் அமரத்துவம் அடைந்த திருமதி. சிவபாக்கியம் நடராசா அவர்கள். வாழ்வாங்கு வாழ்ந்த அன்புடைத்தோன்றல். அன்பு இவர் அளந்து பேசும் சொல்லிலே தோன்றும் பண்பு இவர் நடந்து செல்லும் பாங்கில் தோன்றும். இவர் பிறந்த நயினை மண்ணுக்கும், புகுந்த புங்குடுதீவு மண்ணுக்கும் பெருமை சேர்த்தவர். புங்குடுதீவில் தனது, கல்விப் பணியைப் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து இறுதியாகப் பெருங்காடு அமெரிக்க மிஷன் பாடசாலையின் அதிபராக இருந்து, அப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி உயர்வுக்கும் உறுதுணையாக இருந்து, புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்தும் கலைவிழாக்கள், ஒன்றுகூடல் ஆகிய நிகழ்ச்சிகளிலெல்லாம் தவறாது வருகை தந்து கலந்து கொள்வதோடு, தனது கணவர் திரு. நடராசா அதிபர் பெயரில் 'நினைவுப் பரிசில்களை வருடா வருடம் வழங்கித் தாம் வாழ்ந்த சமூகத்தின் மக்களையும், மண்ணையும் மறவாது இருந்தவர்.

இறுதியாகத் தன்னிடம் கல்வி பயின்ற மாணவன் எழுதிய கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, அம்மாணவரது பெருமைகளை அங்கு கூறி உரையாற்றிய நிகழ்வு இன்றும் என் கண்முன்னே நிழலாடுகின்றது. தொலைபேசி மூலம் தனது சக ஆசிரியை ஒருவரிடம் உரையாடிக் கொண்டிருக்கின்ற பொழுது, அவர் உயிர் பிரிந்துள்ளது. ஆசிரியையிடம் கல்வி பயின்ற மாணவ, மாணவிகள் எல்லாம் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறப்புற்று விளங்கி வாழ்ந்து வருகின்றனர். அமரரது அருமைக் கணவர் அதிபர் திரு. நடராசா அவர்கள் மறைந்தும் இன்றும் அவரது பெருமைகள், பெயர் நிலைத்திருப்பது போல், ஆசிரியை எங்கள் மத்தியில் இல்லை என்றாலும், அவரது நாமம் இவ்வுலகுள்ள வரை நிலைத்திருக்கும். இவரது பிரிவால் துயருறும் அருமைப் பிள்ளைகள், மருமக்கள், எங்கள் சகோதரி திருமதி. பாக்கியநாதன் குடும்பத்தோடு மிகவும் நெருங்கிய அன்புக்குரிய ஆசிரியையின் அன்புச் சகோதரர் சதானந்தன் அண்ணர் அவர்களுக்கும் எனது

ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, இவரின் இனிய ஆத்மா நயினை அம்பிகையின் பாதாரவிந்தங்களை சென்ற டைந்திருக்கும் என்ற மனநிறைவோடு ஆறுதல் அடைவோ மாக.

ஓம் சாந்தி!

*தீவகம் சோமு. சச்சிதானந்தன்.*

## ஆசிரியை முத்து அமரர். சிவபாக்கியம் நடராசா

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அடிப்படை யான கண்ணெனத்தகும் எண்ணும் எழுத்தையும், எமக்குப் பயிற்றும் உண்மையான சமூகத் தொண்டர்களாக விளங்கும் ஆசிரியர்களை இறைவனாக மதித்துப் போற்றுவது எமது மரபு. இதனால்தான், எழுத்தறிவித்தவன் இறைவன் என்றா யிற்று. மாதா, பிதா என்பவர்களுக்கு அடுத்தபடியாக வைத்து மதிக்கப்படுபவர் குரு. அருமையும் பெருமையும் உடையவராக விளங்கும் குருவே எமது வாழ்விற்கு மெருகூட்டுபவர் ஆவார். குருவில்லா வித்தைபாழ். எனவே, ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் தேசுமிக்கவர்களாக பூசிக்கப்படுகின்றார்கள்.

உளம் நிறைந்த உத்வேகத்துடன் இளம் வயதில் ஆசிரியப் பணியை மேற்கொண்ட அமரர். சிவபாக்கியம் நடராசா, தளம்பலின்றி மாணவர் முன்னேற்றத்திற்கு களம் அமைத்துக் கொடுத்தவர். ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கு கடுஞ்சொல்லையும், பிரம்பையும் பாவித்து வந்த அந்தக் காலத்தில், அன்பையும், அரவணைப்பையும் ஆயுதங்களாகக் கொண்டு பிஞ்சு உள்ளங்களுடன் கொஞ்சி விளையாடி, அவர்கள் கல்வியில் விஞ்சி நிற்கச் செய்தவர். அன்பாலும், பண்பாலும் மாணவர் ஆசிரியர் நல்லுறவை வளர்த்தவர். குருவே தஞ்சம் என்று கருதப்பட்ட அக்காலத்தில் மாணவர் களுக்குப் பற்றுக்கோடாக இருந்தவர். மூன்று முதன்மைக்கு உரியவராக விளங்கியவர். அமரர். சிவபாக்கியம் நடராசா குடும்பத்தின் தலைமகளாகவும் நயினையம்பதியின் முதல் ஆசிரியையாகவும் புங்கை நகரில் அதிபர் பதவி வகித்த முதற் பெண்ணாகவும் திகழ்ந்தவர்.

இத்துணைப் பெருமைக்கும் சிறப்பிற்கும் உரிய அமரர். சிவபாக்கியம் நடராசா புலம்பெயர்ந்த கனடா நாட்டில் (31.03.2000) மார்ச் 31ம் திகதி இறைவன் திருவடியை எய்தி னார். பெற்ற பிள்ளைகள் அறுவர் எனினும் படித்த பிள்ளை பல நூறு பேர். அவர் பிரிவு கேட்டுப் பதறித் துடித்தனர். இது அவரின் தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக் காட்டாகும். அவரது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத் திவ் உலகு:

நா. க. சிவராமலிங்கம். B. A
ஆசிரியர்

## 1953 நவம்பர் மாதம் நயினை மகாவித்தியாலய ஆசியர்,மாணவர் அளித்த பிரியாவிடைச் செய்யுட்கள் சில:

கலைக்குடியில் வளர்நயினை காராளும் நாகலிங்க
மலைக்குவட்டின் ஒளிப்பிளம்பாம் மகளான புகழணியே
தொலைக்கு நிகர் நடைபூண்டு துணிந்து கலைத் துறையேறி
நிலைக்கு மெழுத்து எண் எழுத்து நியம நிலை மேற் கொண்டாய்

படித்த தமிழ்க் குருகுலத்திள் பாவையருள் முதலிடத்தைப்
பிடித்து உயர்ந்த கலைஞனைக் கை பிடித்தொளிரும் பெரு மகளாய்
துடித்தெழுந்து பல மகளிர் தூநெறியில் உனைத் தொடர
எடுத்தடி வைத்திட நிமித்தம் என விளங்கும் களங்கமிலாய்

தனித்திருந்து கலைபயிற்றலிலும் சதிபதியாய்
நனிதிருந்து தொழில் புரிந்து நாயகனுக்கு உதவுதியேல்
இனியாத இனிப்பேற்றி எமக்கூட்ட இனியாரோ!

# விழி சிந்தும் கண்ணீர்ப் பூக்கள்

எண்ணும் எழுத்தும் கண்ணெனச் சொல்லி
ஏட்டில் கல்வி தந்த தாயே!
விண்ணும் மண்ணும் மதிக்கும் வகையில்
கல்விச் செல்வம் தந்த தாயே!
தளிர்க் கைகள் பிடித்து தமிழைப்
பிசைந்து பிசைந்து தந்த தாயே!
விழிக் குளங்கள்
நிறைய நிறைய, நீங்கள் எங்கே!
கலைவாணியை நாம் கண்ணால்
கண்டதில்லை
கலைஞானம்
தந்தது அவளல்ல.,
அது நீங்களல்லவா?
உங்களால் உருவான மாணவர்
எத்தனை ஆயிரம் பேர்கள்
அத்தனை பேரும்
அகமுடைந்து நிற்கின்றோம் இன்று!
“கெற் ரீச்சர்” “கெற் ரீச்சர்” என அழைத்த
எம் வாய்கள் இனி யாரை அழைக்கும்?
“கெற் ரீச்சர்” என்றால்,
எங்களுக்கு அது நீங்கள் மட்டும்தானே!
உலகம் வெல்லும் வல்லமையை
எங்கள் நாளங்களில்
ஏற்றியது உங்கள்
கல்விச் சேவையல்லவா?
எங்கள் ஒவ்வொருவரினதும் உயர்விலும்
“இவன் என் மாணவன்”
எனச் சொல்லி பெருமை கொள்ளும் நெஞ்சம் எங்கே?
எங்கே?

இறையடி சேர்ந்த எங்கள் ஆசிரியையின் இணையடி தொழுது நிற்கும்
கவிஞர். தாட்சாயணி, புங்கையூர் தவ. கோபி மற்றும் புங்குடுதீவு அமெரிக்கன்
மிஷன் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர்கள்.

# எங்கள் பாக்கியம்

செந்தாமரைதேன் பிலிற்றியிதழ் சிலிர்க்க நாலா திசையிருந்தும்
வந்தே பருகி ஆயிரமாம் வண்டர் மகிழ்தல் போல் சிறார்க்கு
நந்தா விளக்காய் ஆசிரியை நாலும் இரண்டும் நயப்பித்த
சிந்தா மணியாம் சிவபாக்கியம் சிவன்தாள் சேர்ந்தாள் செய்வதென்னே

இரவு பகலென் றெப்பொழுதும் இலங்கித் துலங்கும் எழில்வதனம்
கரவே அறியாத் தூயவுளம் கற்றுவல்ல கதிர்த்த மதி
வரந்தான் தந்த தலைவனென வந்த அதிபன் நடராசா
பரந்த பண்பான் தலைவி சிவபாக்கியம் எங்கள் பாக்கியமே

காலை எழுந்தே குதூகலித்துக் கடமைக் கெம்மைவழிப்படுத்தி
மாலை நாங்கள் மனை சேரா முன்பே மலர்ந்தாள் மலரடிக்கே
ஆலைக்கரும்பாய் அகம் நைந்தோம் அம்மை அமுத மொழியின்று
பாலைநிலம் சேர் துளியாகும் பரிசோ எங்கள் பழவினையே

கண்ணுக் கிமையாய் கருத்தினிற்குக் கனிசெஞ்சொல்லாய் காத்திருந்து
எண்ணும் எண்ணம் எல்லாமெங்கள் மேலாய் இருந்த இறைவியெனும்
தண்ணென் நலத்தாள் தலையணிந்த தாயாள் அத்தை பாட்டியென
நண்ணும் அமிழ்த ஊற்றான நலத்தாள் சிவன்தாள் நயந்தனளே.

சரவணையூர் பண்டிதா.

## பயிராக்கிய வயலுக்கொரு படையல்

கல்விக்கொரு களனாய் நின்ற
அறிவுப் பெரு விளக்கு
அன்புக்கொரு அரணாகிய
பாசம் நிறை சுரபி
தாய்மைக்குரிய அணியாகிய
நேசம் மிகு ஊற்று
ஊருக்கெலாம் அறிவூட்டிய
உந்தன் பணி பெரிது.

அஞ்சாத் தமிழ் பொங்கும் வகை
சொன்னாய் அம்மா சொன்னாய்
நெஞ்சம் நிறை வழியில்பணி
செய்தாய் அம்மா செய்தாய்
கொஞ்சும் குரல் என்னும் அது
விஞ்சும் தமிழ் அலவோ?
தஞ்சம் என அடைந்தாய்
தாயின் அடி இணைந்தாய்.

நயினைப்பதி மக்கள் நாம்ஒரு
நன்றிக்கடனோடு
பயிராக்கிய வயலுக்கொரு
படையல் எனஇன்று
அன்னைத் தமிழ் கொண்டு ஒரு
ஆரம் எனஇன்று அஞ்சலிகள்
தந்தோம்! அஞ்சலிகள் தந்தோம்!
சிவபாக்கியமாய் தாள் சேர்க.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நயினாதீவு மக்கள் சார்பாக நயினாதீவு - கனடியர்
அபிவிருத்திச் சங்கம் வழங்கிய கண்ணீர் அஞ்சலி


## நயினாதீவு மக்கள் சார்பாக
## கனடா நயினாதீவு அபிவிருத்தி
## ஒன்றியம் வழங்கும் கண்ணீர் அஞ்சலி

கொட்டும் பனி அகன்று கோடை வசந்தம்
தொட்டு வரும்வேளை, தொடர்மாடியின்
தட்டுச் சுவர்களுக்குள் தடுமாறாமல்
கட்டுப்பாடின்றிக் கால் பதிப்தோம்
எனக் காத்திருக்க
விட்டானோ காலன் விதி என்ற போர்வையிலே
விளையாடித் தொடங்கி விட,
சட்டென்று தொலை அழைப்பு நிற்கிறது ஒரு
சரித்திரம் முற்றுப் புள்ளி அடைகிறது!
உடல் காய உயிர் போகும் பாதை உறுதியாக
“சிவபாக்கியம்” என்ற சித்திரம்
சிலையாகி விட்டதையோ!
எத்திசையும் தேடுகின்றோம் ஏக்கத்தால் விம்மிஅழ
இப்புவியில் உம் பிறப்பை இனி எங்கு நாம்
காண்போம்!
நயினான மண் பெற்றெடுத்த முத்து ஆனீர் - அம்
மண்ணின் முதற்பெண்மணி ஆசியையானீர்!
புங்கை மண்ணில் புதுவாழ்வு பெற்றீர் - புகுந்த
மண்ணில் புகழ்சேர்க்கும் அதிபரானீர்!
நாற்றிசையும் நம் தாய் மண்ணில் சேவை கொண்டீர்!
நற்பெயர் சேர்க்க மக்கட் செல்வம் நலமே கண்டீர்!

புலம் பெயர்ந்து பேரர்களோடு புதுவாழ்வு பெற்றீர்
நலம் பெற எம் இனத்தார் பாசம் கொண்டீர்!
நயினை மண் உம் பிரிவால் வாட்டம் கொள்ள
உம் பிரிவை எங்கு சென்றுஈடு செய்வோம்!
மீண்டும் நயினை மண்ணில் பிறக்கவேண்டி
இறைவனடி சேர்ந்திட இறைஞ்சுகின்றோம்!

உ
சிவமயம்

# விநாயகர் துதி



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சங்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிணநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கரம் நால்வாய் முக்கண் அருட்சிவ களிறே போற்றி
கங்கையாய் மகிழுஞ் செல்வக் கணேசநின் கழல்கள் போற்றி

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

உ
சிவமயம்



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் ஆநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி - வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கும்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்.

உ

சிவமயம்

# பன்னிரு திருமுறைகள்

# தேவாரங்கள்

## திருஞான சம்பந்த நாயனார்

### 1ம் 2ம் 3ம் திருமுறைகள்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைமுழவதிரும்
அண்ணாமலை தொழுவார்விலை வழுவாவண்ணமறுமே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

# தேவாரங்கள்

## திருநாவுக்கரசு நாயனார்

### 4ம் 5ம் 6ம் திருமுறைகள்

நெஞ்சமுமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதுமிருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

### திருத்தாண்டகங்கள்

திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

# தேவாரங்கள்
## சுந்தரமூர்த்தி நாயனார்

### 7ம் திருமுறை

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே.

# திருவாசகம்
## மாணிக்கவாசக சுவாமிகள்

### 8ம் திருமுறை

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே! நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

# திருவிசைப்பா
## திருமாளிகைத்தேவர்

### 9ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

# திருப்பல்லாண்டு
## சேந்தனார்

### 9ம் திருமுறை

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# திருமந்திரம்
## திருமூலநாயனார்

### 10ம் திருமுறை
சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யானே.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கு மின்பமருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே.

அப்பனை நந்தியை யாரா வமுதினை
யொப்பிலி வள்ளலை யூழிமுதல்வனை
யெப்பரி சாயினு மேத்துமி னேத்தினா
லப்பரி சீசனருள் பெறலாமே.

# திருமுருகாற்றுப்படை
## நக்கீரதேவநாயனார்

### 11ம் திருமுறை
குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

# அற்புதத் திருவந்தாதி
## காரைக்கால் அம்மையார்

### 11ம் திருமுறை
இடர்களையா ரேனும்எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

# கயிலைபாதி காளத்திபாதி
## நக்கீரதேவ நாயனார்

### 11ம் திருமுறை
சொல்லும் பொருளுமே தாத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேல்இருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.

# பெரியபுராணம்
## சேக்கிழார் நாயனார்

### 12ம் திருமுறை
தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

# திருப்புகழ்

## அருணகிரிநாதர்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

# முத்துமாரி தோத்திரம்

உலகத்து நாயகியே! - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
உன் பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

கலகத் தரக்கர்பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

பலகற்றும் பலகேட்டும், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

துணிவெளுக்க மண்ணுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

பிணிகளுக்கு மாற்றுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பேதைமைக்கு மாற்றில்லை, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

அணிகளுக்கொ ரெல்லையிலாய்,- எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

## தேச முத்துமாரி தோத்திரம்

தேடியுனைச் சரணடைந்தேன், தேச முத்துமாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்டவரந் தருவாய்

பாடியுனைச் சரணடைந்தேன், பாசமெல்லாங் களைவாய்
கோடிநலஞ் செய்திடுவாய், குறைகளெல்லாந் தீர்ப்பாய்.


எப்பொழுதுங் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி
ஒப்பியுன் தேவல்செய்வேன் உனதருளால் வாழ்வேன்.

சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க் கவிதை பாடி,
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்துந் தீரும்.

ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்,
யாதானுந் தொழில் புரிவோம், யாதுமவள் தொழிலாம்

துன்பமே இயற்கையெனும் சொல்லைமறந் திடுவோம்,
இன்பமே வேண்டி நிற்போம், யாவுமவள் தருவாள்

நம்பினோர் கெடுவ தில்லை, நான்கு மறைத் தீர்ப்பு,
அம்பி கையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்




## நயினை நாகபூஷணியம்மை தோத்திரம்

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்னினத்தார் வாழ்வென்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவர் ஒப்பில்லாத்தாயே இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

**நயினைப் பெரியார் க. இராமச்சந்திரா.**

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
வேணலாலன்னை பெற்றிடவோ
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலாலன்னை எக்கவலையுஞ்
சொற்றதாலன்னை யுலகொடு வானும்
தொழுதலாலன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூசணியால்



# நாகபூஷணி தேர்
# ஸ்தோத்திரம்

அம்மா தாயே அம்மா தாயே
ஆதி பராசக்தி
ஆடி வருவாய் ஆடி வருவாய்
அழகுத் தேரிலே

பக்தர்கள் புடை சூழ
பஜனைகள் பாடி வர
பாரினிலே பாவையவள் எங்கள்
நயினை அம்மையே தாயே
நாகபூஷணி! (அம்மா)

கடலலை மத்தியிலே
கடலலை போல மக்கள்
கனிவனை கண்ணம்மாள் எங்கள்
நயினை அம்மை தாயே
நாகபூஷணி! (அம்மா)

மங்கள இசை முழங்க
மலர்கள் வீசி வர
மனமேவும் மங்கையவள் எங்கள்
நயினை அம்மையே தாயே!
நாகபூஷணி! (அம்மா)

நாற்றிசை போற்றும் - எழில்
நாயகி நாரணியே
நானிலத்தின் துயர் நீக்கும்-எங்கள்
நயினை அம்மையே தாயே
நாகபூஷணி! (அம்மா)

# நயினை நாகபூஷணி பதிகம்


நயினையில் வாழும் எங்கள் நாகபூஷணி
நலங்கள் எல்லாம் அருளும் நல் அம்பிகே!
(நயினை)

சுற்றிவரக் கடலலையில் காட்சி தருவாய்
சுடர் ஒளியாய் மனதில் ஒளிர்ந்திடுவாய்
(நயினை)


மணிபல்லவம் தந்த மகுடமம்மா - நீ
மலர் போன்ற உன்தன் திருப்பாதமம்மா
தீவினுக்கு நீயோர் அரசியம்மா - சப்த
திருவருள் எந்தனுக்கு வேண்டுமம்மா
(நயினை)

இன்னல்கள் நீக்கிடுவாய் இறைவியம்மா - மன
இருளை அகற்றிடுவாய் நாகம்மா
அன்பர் தம் நெஞ்சினிலே குடிகொண்டால் - நீ
அருள் மழை பொழிந்திடுவாய் நல்லம்மா
(நயினை)

ஆக்கம்: இசைக்கலைமாமணி
சுமங்கலா சண்முகநாதன்



ஓம் ஸ்ரீ சாயிராம்



**“வந்து பாருங்கள். உள்ளத்தால் உணருங்கள். அந்த வழியும் அதற்காக நான் காட்டும் பண்புகளும் உங்கள் நெஞ்சத்தை தொட்டால் தொடருங்கள், என்னிடம் நீங்கள் பக்தி செலுத்த வேண்டாம். உங்கள் இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்ளுங்கள். அங்கே நான் உங்களுடன் வந்து கலந்து கொள்கிறேன்.”**

**- பாபா**

# பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அஷ்டோத்தர சத நாமாவளி

1. ஓம் ஸ்ரீ பகவான் ஸத்ய ஸாயி பாபாயா நம:
2. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம:
3. ஓம் ஸ்ரீ ஸத்ய தர்ம பராயணாய நம:
4. ஓம் ஸ்ரீ வரதாய நம:
5. ஓம் ஸ்ரீ சத் புருஷாய நம:
6. ஓம் ஸ்ரீ சத்ய குணாத்மனே நம:
7. ஓம் ஸ்ரீ சாது வர்த்தனாய நம:
8. ஓம் ஸ்ரீ சாது ஜன போஷணாய நம:
9. ஓம் ஸ்ரீ சர்வக் ஞாய ம:
10. ஓம் ஸ்ரீ சர்வ ஜன ப்ரியாய நம:
11. ஓம் ஸ்ரீ சர்வ சக்தி மூர்த்தயே நம:
12. ஓம் ஸ்ரீ சர்வேசாய நம:
13. ஓம் ஸ்ரீ சர்வ சங்க பரித்யாகினே நம:
14. ஓம் ஸ்ரீ சர்வந்தர் யாமினே நம:
15. ஓம் ஸ்ரீ மஹிமாத்மனே நம:
16. ஓம் ஸ்ரீ மஹேஸ்வர ஸ்வரூபாய நம:
17. ஓம் ஸ்ரீ பர்த்தி கிராமோத் பவாய நம:
18. ஓம் ஸ்ரீ பர்த்தி ஷேத்திர நிவாசினே நம:
19. ஓம் ஸ்ரீ யசகாய ஷிர்டி வாசினே நம:
20. ஓம் ஸ்ரீ ஜோடி ஆதிபல்லி சோமப்பாய நம:
21. ஓம் ஸ்ரீ பரத்வாஜ ரிஷி கோத்ராய நம:
22. ஓம் ஸ்ரீ பக்த வத்சலாய நம:
23. ஓம் ஸ்ரீ அபாந்தராத்மாய நம:
24. ஓம் ஸ்ரீ அவதார மூர்த்தயே நம:
25. ஓம் ஸ்ரீ சர்வ பய நிவாரிணே நம:
26. ஓம் ஸ்ரீ ஆபஸ்தம்ப சூத்திராய நம:
27. ஓம் ஸ்ரீ அபய ப்ரதாய நம:
28. ஓம் ஸ்ரீ ரத்னாகர வம்சோத்பவாய நம:
29. ஓம் ஸ்ரீ சாயி ஷிர்டி அபேத சக்தி அவதாராய நம:
30. ஓம் ஸ்ரீ சங்கராய நம:
31. ஓம் ஸ்ரீ ஷிர்டி ஸாயி மூர்த்தயே நம:
32. ஓம் ஸ்ரீ துவாரகா மாயி வாஸினே நம:
33. ஓம் ஸ்ரீ சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரினே நம:
34. ஓம் ஸ்ரீ சக்தி ப்ரதாய நம:
35. ஓம் ஸ்ரீ சரணாகத த்ரணாய நம:
36. ஓம் ஸ்ரீ ஆனந்தாய நம:

37. ஓம் ஸ்ரீ ஆனந்த தாய நம:
38. ஓம் ஸ்ரீ ஆர்த்த த்ராண பராயணாய நம:
39. ஓம் ஸ்ரீ அனாத நாதாய நம
40. ஓம் ஸ்ரீ அஸஹாய சஹாயாய நம:
41. ஓம் ஸ்ரீ லோக பாந்தவாய நம
42. ஓம் ஸ்ரீ லோக ரஷா பராயணாய நம:
43. ஓம் ஸ்ரீ லோக நாதாய நம:
44. ஓம் ஸ்ரீ தீனஜன போஷணாய நம:
45. ஓம் ஸ்ரீ மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:
46. ஓம் ஸ்ரீ முக்தி ப்ரதாய நம:
47. ஓம் ஸ்ரீ கலுஷ விதுராய நம:
48. ஓம் ஸ்ரீ கருணாகராய நம:
49. ஓம் ஸ்ரீ சர்வா தாராய நம:
50. ஓம் ஸ்ரீ சர்வ ஹ்ருத வாசினே நம:
51. ஓம் ஸ்ரீ புண்ய பலப்ரதாய நம:
52. ஓம் ஸ்ரீ சர்வ பாப ஷயகராய நம:
53. ஓம் ஸ்ரீ சர்வ ரோக நிவாரிணே நம:
54. ஓம் ஸ்ரீ சர்வ பாத ஹராய நம:
55. ஓம் ஸ்ரீ அனந்தநுத கர்த்தாய நம:
56. ஓம் ஸ்ரீ ஆதி புருஷாய நம:
57. ஓம் ஸ்ரீ ஆதி சக்தயே நம:
58. ஓம் ஸ்ரீ அபரூப சக்தினே நம:
59. ஓம் ஸ்ரீ அவ்யக்த ரூபிணே நம:
60. ஓம் ஸ்ரீ காம க்ரோத த்வம்ஸினே நம:
61. ஓம் ஸ்ரீ சாயி கனகாம்பர தாரிணே நம:
62. ஓம் ஸ்ரீ அற்புத சர்யாய நம:
63. ஓம் ஸ்ரீ ஆபத் பாந்தவாய நம:
64. ஓம் ஸ்ரீ ப்ரேமாத்மனே நம:
65. ஓம் ஸ்ரீ பிரேம மூர்த்தயே நம:
66. ஓம் ஸ்ரீ ப்ரேம ப்ரதாய நம
67. ஓம் ஸ்ரீ ப்ரியாய நம:
68. ஓம் ஸ்ரீ பக்த ப்ரியாய நம:
69. ஓம் ஸ்ரீ பக்த மந்தராய நம:
70. ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம:
71. ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதயாலயாய நம:
72. ஓம் ஸ்ரீ பக்த பராதீனாய நம:
73. ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதீபாய நம:
74. ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதாய நம:
75. ஓம் ஸ்ரீ சுஞ்ஞான மார்க்க தர்சகாய நம:
76. ஓம் ஸ்ரீ ஞான ஸ்வரூபாய நம:
77. ஓம் ஸ்ரீ கீதா போதகாய நம:
78. ஓம் ஸ்ரீ ஞான சித்தி தாய நம:
79. ஓம் ஸ்ரீ சுந்தர ரூபாய நம:
80. ஓம் ஸ்ரீ புண்ய புருஷாய நம
81. ஓம் ஸ்ரீ பலப்ரதாய நம:
82. ஓம் ஸ்ரீ புருஷோத்தமாய நம:
83. ஓம் ஸ்ரீ புராண புருஷாய நம:
84. ஓம் ஸ்ரீ அதீதாய நம:
85. ஓம் ஸ்ரீ காலாதீதாய நம:
86. ஓம் ஸ்ரீ சித்தி ரூபாய நம:
87. ஓம் ஸ்ரீ சித்தி சங்கல்பாய நம:
88. ஓம் ஸ்ரீ ஆரோக்கிய ப்ரதாய நம:
89. ஓம் ஸ்ரீ அன்ன வஸ்திர தாய நம:
90. ஓம் ஸ்ரீ சம்சாரதுக்க ஷயகராய நம:
91. ஓம் ஸ்ரீ சர்வாபீஷ்ட ப்ரதாய நம:
92. ஓம் ஸ்ரீ கல்யாண குணாய நம:
93. ஓம் ஸ்ரீ கர்ம த்வம்சினே நம:
94. ஓம் ஸ்ரீ சாயி சாது மானஸ சோபிதாய நம:
95. ஓம் ஸ்ரீ சர்வமத சம்மதாய நம:
96. ஓம் ஸ்ரீ சாது மானஸ பரிசோதகாய நம:
97. ஓம் ஸ்ரீ சாதாகானுக்ரஹ வடல்ருஷ ப்ரதிஷ்டாப - காய நம:
98. ஓம் ஸ்ரீ சகல சம்சய ஹராய நம:
99. ஓம் ஸ்ரீ சகல தத்வ போதகாய நம:
100. ஓம் ஸ்ரீ யோகீஸ்வராய நம:
101. ஓம் ஸ்ரீ யோகீந்த்ர வந்திதாய நம:
102. ஓம் ஸ்ரீ சர்வ மங்கள கராய நம:
103. ஓம் ஸ்ரீ சர்வ சித்தி ப்ரதாய நம:
104. ஓம் ஸ்ரீ ஆபந் நிவாரினே நம:
105. ஓம் ஸ்ரீ ஆர்த்தி ஹராய நம:
106. ஓம் ஸ்ரீ சாந்த மூர்த்தயே நம:
107. ஓம் ஸ்ரீ சுலப ப்ரசன்னாய நம:
108. ஓம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாய நம:



## குழந்தைப் பாடல்கள்

மறக்க முடியுமா அன்னையின் நினைவுகளை எமது தாயார் எம்மை தாலாட்டி, சீராட்டி, உணவூட்டி வளர்த்த பசுமையான நினைவுகள் எம் மனக் கண்முன்னே நின்று எங்கள் பழைய நினைவுகளை மீட்கும் இவ்வேளையில் எமது தாயார் எமது வளர்ச்சிக்காக தனது நேரத்தை ஒதுக்கி சொல்லித் தந்த பாப்பா பாடல்கள் பல எம்மனதில் இன்றும் நினைவலைகளாக நின்று மோதுகின்றன. தனது பேரக் குழந்தைகளும் இப்பாப்பா பாடல்களை படிக்க வேண்டும் என அவர் அழைத்ததும், அவர்கட்கு நேரிலும் தொலைபேசியிலும் சொல்லிக் கொடுத்த நாட்கள் இனி வருமா அவர் விரும்பிச் சொல்லிக் கொடுத்த பாடல்கள் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

## கைவீசுதல்

கைவீசம்மா, கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு,
மிட்டாய் வாங்கலாம் கைவீசு,
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு,
முறுக்கு வாங்கலாம் கைவீசு,
மிடுக்காய்ச் சாப்பிடலாம் கைவீசு,
சொக்காய் வாங்கலாம் கைவீசு,
சொகுசாய்ப் போடலாம் கைவீசு,
கம்மல் வாங்கலாம் கைவீசு,
காதிலே போடலாம் கைவீசு,
கோயிலுக்குப் போகலாம் கைவீசு,
கும்பிட்டு வரலாம் கைவீசு,
லட்டு வாங்கலாம் கைவீசு,
பிட்டுத் தின்னலாம் கைவீசு,
பழங்கள் வாங்கலாம் கைவீசு,
பரிந்து புசிக்கலாம் கைவீசு,
அப்பம் வாங்கலாம் கைவீசு,
அமர்ந்து தின்னலாம் கைவீசு,
பூந்தி வாங்கலாம் கைவீசு,
பொருந்தி உண்ணலாம் கைவீசு,
பழங்கள் வாங்கலாம் கைவீசு,
பரிந்து புசிக்கலாம் கைவீசு,
தோரைப் பார்க்கலாம் கைவீசு,
திரும்பி வரலாம் கைவீசு,

## தோள்வீசுதல்

தோள் வீசம்மா, தோள்வீசு,
சுந்தரக் கிளியே, தோள்வீசு,
பச்சைக் கிளியே, தோள்வீசு,
பவழக் கொடியே, தோள்வீசு,
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே, மணியே, கைவீசு

## சாய்ந்தாடல்

சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு,
சாயக் கிளியே, சாய்ந்தாடு,
குத்து விளக்கே, சாய்ந்தாடு,
கோவில் புறாவே, சாய்ந்தாடு,
அன்னக் கிளியே, சாய்ந்தாடு,
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே, மணியே, சாய்ந்தாடு,
கண்ணே, மணியே, சாய்ந்தாடு,
கற்பகக் கொடியே சாய்ந்தாடு,
சோலைக் கிளியே, சாய்ந்தாடு,
சுந்தர மயிலே, சாய்ந்தாடு,

## குழந்தைக்குச் சோறு ஊட்டுதல்

காக்கா, கண்ணுக்கு மைகொண்டுவா,
குருவீ, கொண்டைக்குப் பூக்கொண்டுவா,
கொக்கே, குழந்தைக்குத் தேன் கொண்டுவா,
கிளியே, கிண்ணத்தில் பால் கொண்டுவா,
அப்பா, முன்னே வாருங்கோ,
அழாதே என்று சொல்லுங்கோ.

(2)

நடுவீட்டில் வையே - நல்ல துதி செய்யே,
வெள்ளிக் கிண்ணத்தில் பாலும் சோறும்
எடுத்து அப்பன் வாயில் ஊட்டு,
அள்ளி வாயில் ஊட்டு,

## குழந்தைப் பாடல்கள் சில

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒரு விழா
இடிஇடிக்கும் மேகங்கள்
இறங்கிவரும் தாளங்கள்
மின்னல் ஒரு நாட்டியம்
மேடைவான மண்டபம்
தூறல் ஒரு தோரணம்
தூயமழை காரணம்
எட்டுத்திசை காற்றிலே
ஏகவெள்ளம் ஆற்றிலே
தெருவில் எல்லாம் வெள்ளமே
திண்ணை ஓரம் செல்லுமே
பார்முழுதும் வீட்டிலே
பறவைகூட கூட்டிலே
தவளைமட்டும் பாடுமே
தண்ணீரிலே ஆடுமே
அகன்றவெளி வேடிக்கை
ஆண்டுதோறும் வாடிக்கை

ஆராரோ, ஆரரிரோ, ஆராரோ ஆரரிரோ
முத்தே, பவழமே, முக்கனியே சக்கரையே
கொத்து மருக்கொழுந்தே, கோமளமே கண்வளராய்,
பொன்னே, நவமணியே, பூங்கொடியே, பூஷணமே
அன்னமே, எம்முடைய ஆசையே கண்வளராய்,
கற்கண்டே பாகே, கனிரசமே, செங்கரும்பே,
கற்பகமே, எம்முடைய காதலனே, கண்வளராய்,
தித்திக்கும் பாலே, தெவிட்டாத தெள்ளமுதே,
சித்தத்தி னுட்கனிக்கும் செங்கரும்பே, கண்வளராய்
ஆணிப் பசும்பொன்னே, ஆராத தென்னமுதே,
மாணிக்கமே எங்கள் வர்ழ்வே, நீ கண்வளராய்,
அத்தை அடிச்சாளோ? அம்மான் அடிச்சானோ?
முத்துக்கண் ணீர்நிறுத்தி மோனமாய்க் கண்வளராய்
பாட்டி அடிச்சாளோ பால் வார்க்கும் கையாலே?
வாட்டம் ஒழிந்து நீ மைந்தனே, கண்வளராய்,
மாமி அடிச்சாரோ மல்லிகைப்பூச் செண்டாலே?
சாமி, புலம்பாதே சண்முகமே, கண்வளராய்,
அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும் மகிபனே, கண்வளராய்

அம்மா அப்பா ஆனவரே
ஆடை அணிகள் அளிப்பவரே
இனிய உணவும் தருவீரே
ஈசன் பாதம் தொழுவோமே
உண்போம் உடுப்போம் உவந்திடுவோம்
ஊஞ்சல் ஆடிப்பாடிடுவோம்
எண்ணும், எழுத்தும் கற்றிடுவோம்

ஏவாமற் பணிசெய்திடுவோம்
ஐயம் திரிபுற கற்றிடுவோம்
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்
ஓடி ஆடி மகிழ்ந்திடுவோம்
ஔவை பாடல் படித்திடுவோம்
அன்பாய்க்கூடி வாழ்ந்திடுவோம்.

காலைத் தூக்கி கண்ணில் ஒற்றி
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சி சீனி போட்டு
பருக தந்த அம்மா
புழுதி துடைத்து நீரும் ஆட்டி
பூவும் சூட்டும் அம்மா
அழுதிடாமல் பள்ளிக்கூடம்
போகச் செய்யும் அம்மா
பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழியே வந்து
துள்ளித் குதிக்கும் என்னைத் தூக்கி
தோளில் போடும் அம்மா



# வம்சாவழி

நாகலிங்கம் + இலட்சுமிப்பிள்ளை
(அமரத்துவ தம்பதிகள்)

நாகலிங்கம் + நாகம்மா
(அமரத்துவ தம்பதிகள்)

பராசக்தி
பொன்னம்பலம்
கார்த்திகேசு
இராசையா
சோமசுந்தரம்
இராசம்மா
(அமரர்கள்)

சிவபாக்கியம் — நடராஜா
மனோன்மணி
சிவமணி
சதானந்தன்

சுசீலாதேவி (அமரத்துவ அன்னை)

சுசீலா * உமாபதிசிவம் — பவித்ரா, சிந்தூரா

சுலோஜனா * லோகேந்திரன் — ஓவியா, இலக்கியா

சுகுமார் * வசந்தினி — ஹரிஷ், கோகுல்

சுரேஸ்குமார் * ஞானசௌந்தரி — நரேன், சுரநுதா

சுதாகரன் * நந்தவருணி


சுமங்கலா * சண்முகநாதன் — தாமிரா

# நன்றி நவிலல்

அன்னையென வாழ்ந்து வாழ்வித்த எம் தெய்வம் பின்னர் ஒரு செய்தியின்றிப் பிரிந்த வேளைதனில் மின்னல் வேகத்தில் வீட்டிற்கு விரைந்த உற்றார்க்கும் பற்றுடனே சுற்றமென நின்ற மற்றவர்க்கும் நற்றவத்தாய் கிரியைகளில் கலந்து கொண்டவர்க்கும் வண்ணமலர் சாத்தி அஞ்சலிகள் செய்தோர்க்கும் பிரசுரங்கள் வெளியிட்டு இதயக்குமுறலை வெளிப்படுத்தியோர்க்கும் இரங்கலுரை ஆற்றி இறுதிவணக்கம் செலுத்தியோர்க்கும் முப்பத்தோராம் நாள் நிகழ்வதன்போது தப்பாமல் வந்து கலந்து கொண்டோர்க்கும் மற்றுமுள நண்பர்கள் அனைவருக்கும் உற்ற உள்ளத்து நன்றிதனை உரைக்கின்றோம் நாம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள்
உறவினர்

30.04.2000



*Royal Graphic Inc. (416) 293-9163*

## சுதந்திரம் மலர ...............................

எங்கே கல்வி பெருக்கெடுத்தோடுகின்றதோ
எங்கே அறிவாகிய ஆறு தடையின்றிப் பாய்கின்றதோ
எங்கே மக்கள் பயமின்றி தலைநிமிர்ந்து நின்கின்றாரோ
எங்கே குறுகிய தன்மையின் சின்னமாக உலகம் புலர்வதில்லையோ
எங்கே தளர்விலா முயற்சி ததும்பி ரகமாய் பொங்குகிறதோ
எங்கே நிறைவினை நோக்கி கரங்கள் நீளுகின்றதோ
அங்கேதான் சுதந்திர அமரநாட்டு ஒளியில், தாய்நாடு கண்மலரும்

.கவிஞர் தாகூர்